எனவே, மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பன்னிரெண்டாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த ஆர்வமுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிப்பதன்மூலம், அவர்கள் இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்திய கப்பற்படை ஆகியவற்றால் நடத்தப்படும் தகுதித் தேர்வுகளில் எளிதாகத் தேர்ச்சியடைந்து வேலைவாய்ப்பினைப் பெற இயலும். எனவே, ஆண்டுதோறும் 300 மீனவ இளைஞர்களுக்கு, மூன்று மாத கால பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின்போது, அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) என்னால் தற்போது அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பயனாக, மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன், மீனவர் வாழ்வாதாரமும் மேம்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பாய்மரப் படகு அகாடமி நிறுவுதல், உடற்கல்வி, விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மின் நூலகம் அமைத்தல், மலையேறும் பயிற்சிக்கான செயற்கை மாதிரி வடிவமைப்பு அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணாக்கர்களின் பன்முக வளர்ச்சிக்கு விளையாட்டு ஒரு காரணியாக உள்ளதால், கல்விக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது. சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில், பல்வேறு வகையான பயிற்சிகள் அளித்தல், பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல், மாவட்ட விளையாட்டு வளாகங்களை அமைத்தல், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு உயரிய ஊக்கத்

2016 ஆகஸ்ட் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொகையினை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

விளையாட்டு மேம்பாட்டிற்காக இந்த ஆண்டு செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. எங்களது தேர்தல் அறிக்கையில் கடல் நீர் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும் என நாங்கள் தெரிவித்துள்ளோம். அதனை செயல்படுத்தும் வகையில், உலகில் இரண்டாவது மிக நீண்ட கடற்கரையான மெரினாவில் 'பாய்மரப் படகு அகாடமி' ஒன்று நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 'பாய்மரப் படகு மற்றும் துடுப்புப் படகு போட்டிகளுக்கான திறன்மிகு பயிற்சி மையம்' ஒன்றும் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அகாடமி மற்றும் திறன்மிகு பயிற்சி மையம் 7 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் பேராசிரியர்கள் விளையாட்டு தொடர்பான பயிற்சிகள், நுணுக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் பயன்பெற ஏதுவாக, மின் நூலகம் ஒன்று 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படைக்கென தனியாக எந்தவிதமான பயிற்சி நிலையமும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, தேசிய மாணவர் படைக்கென தனியாக பயிற்சி அகாடமி ஒன்று 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று நான் பேரவையில் அறிவித்தபடி, (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை, இடையாபட்டியில் தேசிய மாணவர் பயிற்சி அகாடமி அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் தேசிய மாணவர்

படை வீரர்கள், மலையேறும் பயிற்சியில் தங்களை செழுமைப்படுத்திக்கொள்ள ஏதுவாக, மலையேறும் பயிற்சிக்கான செயற்கை மாதிரி வடிவமைப்பு (artificial rock climbing set up) ஒன்று 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மீன் வளத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், மீன் வளத் துறை தொடர்பாக 6 அறிவிப்புகளையும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பாக 3 அறிவிப்புகளையும் வெளியிட்டு, பொருத்தமான நேரத்தில் பொருத்தமான திட்டங்களை அறிவிப்பவர் நான்தான் என்பதை மீண்டும் இங்கே நிரூபித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் 1,076 கி.மீ. தூரம் வாழும் 608 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவ மக்கள் மனம் குளிரும் வகையில், 6 அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில்கூட, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, மீன் வள மேம்பாட்டிற்காக, 743.79 கோடி ரூபாய்க்கு திட்டங்களை அறிவித்து, நிதி ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) பெரும் சாதனை அறிவிப்பை வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீன்பிடி இறங்கு தளங்கள், மீன்பிடி துறைமுகங்கள், தூண்டில் வளைவுகள், மீன் பதப்படுத்தும் கிடங்குகள் என பல அறிவிப்புகளைச் செய்து, செய்த அறிவிப்புகளையெல்லாம் நடைமுறைப்படுத்தி, மீனவ மக்களின் இதயங்களை ஏற்கெனவே வென்று, மீனவ மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று வெளியிட்ட அறிவிப்புகளில்கூட, எனது தொகுதிக்கான அறிவிப்புகளும் இருப்பதை நினைக்கின்றபொழுது, எனது சார்பில் மட்டுமல்ல, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதி மக்களின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர்*